# குமாரதேவர் அருளிய சுத்தசாதகம்.

காப்பு

**பாயிரம்**

ஆழத்துப்பிள்ளையார் துதி: 1

சூதான மாயையோரைத் துதிக்கையா லெடுத்துமேலா-
ஆதாரமான வந்தவருளினிலிருக்க வைக்கும்,
தாதாவாய் விருத்தவெற்பிற் றங்கியே பிரகாசிக்கும்,
பாதாளத்தானை பாதம் பணிந்து போற்றிடுதல் செய்வாம்

(வேறு.)விருத்தாசலேஸ்வரர் துதி: 2

அருமறையுச் சிதனில் விளங்குவதா
யனாதியாய மலன்மற்றமலை-
இருவர்க்கு நிகழ்ச்சியா யந்தவிறைவற்கிதைய
மாயிலிங்கரூபமதாய்-
ஒருகிரிவடிவாய்க் கொடுமுடியனந்த முடைத்த
தாயுலகெங்கு நிறைவாய்த்-
திருமுதுகிரியென் றொருபெயர்படைத்ததேவை
நாடொறுமிறைஞ்சிடுவாம்

பெரியநாயகியார் துதி. 3

மரகத வடிவு மதித்திருமுகமு மலர்க்
குழலுங் குறுநகையும்-
கரகமல முங்கூர்விழியுஞ் செவ்வாயுங்கச்
சணிதனமுநூலிடையும்-

அரகரவென் போர்க்களித்திடும்பதத் தோடஞ்சலென்
றென்னெதிர்தோன்றி-
உரகதியளித்த பெரியநாயகியை
யுளத்தினிலிருத்தி வாழ்த்திடுவாம். 4

இதுவுமது.

பங்கயன்றிருமாற்கரியதோர் பரமன்
பங்கியே பெரியநாயகியே-
சங்கைகளில தாய்த்தடைகண்மற்றில தாய்த்
தத்துவ மசிக்கருத்தமதை-
அங்கை யினெல்லியென விளக்குவதாய
மலையே யுனக்கிதையமதாம்-
துங்க நன்னெறியொன் றுளத்தினும்விளக்கித்
தொண்டனேன் வாக்கினுமுரைப்பாய் 5

நூல்வரலாறு.

உலகிலெச் சமயங்களு முரைத்திடுதற்கொரு
விரோதங்களுமின்றி-
இலகுமச் சமயங்களுக்கு மேலாகியிலங்
கிடுமுபநிடநெறியை-
அலகிலெம் மண்ணலருளியவகை யுன்னகத்திலும்
விளக்கி வாக்கினிலும்-
குலவிடவுரைப்பேமென்றனள்விருத்தக்
குன்றில்வாழ் பெரியநாயகியே.

இதுவுமது. 6

பெரியநாயகிதற் கருணையலிங்குப்

பிராரத்தமும் மொழிந்தோர்க்குத்-

திரிவதாமாயா வடிவது கரைந்து

திருவருளேவடிவாக-

அரியவாஞ்சாமத்தசியுரைப் படியே

யமைத்திந்தச்சுத்த சாதகத்தைக்-

தெரிவிலாவெளியேன் வாக்கினினின்று

திருவுளம் பற்றியதிதுவே

பாயிரமுற்றும்.

**நூல்.**

**ஈசனதுரையுங் கிரியையதென்று** 7

**மியற்றிடு முபாசனையென்று-**

**பாசமதகன்ற சித்தமதென்றும் பகர்ந்திடு**

**மூன்றுகாண்டமதாம்-**

**நேசநற்கிரியை சைவம் வைதீக நிகழ்ந்திடு**

**முபாசனை சுத்தம்-**

**ஆசில் சிவாத்துவிதமிமை மூன்று**

**மடங்கிடுந் தத்துவமசியே**

கிரியையியினெறியை யிலங்கிடவியம்புங் 8
கிளர்தந்திரம்மெழுநான்கும்-
அரியநல்லுபாச னாநெறியதனை
யறைந்திடுமறையொருநான்கும்-
உரியவச்சுத்தநெறிதனையுரைக்கு
முபநிடச்சுருதியெண்ணான்கும்-
கிரியைதொம்பதந்தற்பதமுபாசனையக்
கேடில்சுத்தம் மசிபதமே

இருக்கு முன்னான்கின்முடிவி லெண்ணான்கா 9
யிலகிடுமுபநிடமவையே-
வருக்க முமிரண்டாம்பூருவமென்றும்
வயங்கிடு முத்தரமென்றும்-
சுருக்க மதின்றியத்தியான்மீகஞ்
சொற்றிடும் பூருவபாகம்-
திருக்கு களின்றியங்கலிங்கயிக்கஞ்
செப்பிடு முத்தரபாகம்

முத்தியாமிடத்துமும்முத லென்றே 10
மொழிபுமாகமுமங்கொன்றாம்-
அத்தியான்மீக மறையுப நிடமுமவனியில்
வழக்கமேயன்றிப்-
பத்தியாளடையு மங்கலிங்கயிக்கம்
பகர்ந்திடுமுபநிட மென்றாம்-
அத்தினாலிவையி லடக்கமதென் பரதை
விளக்கிடுந்தொந் தத்தசியே

சைவ நன்னெறியுந் தந்திரமவையுந் 11
தற்பரன் முகத்தினின்றுதிக்கும்-
துய்ய வைதீகமும்மறை யவையுஞ்
சுவாசமற்றதனினின்றுதிக்கும்-
உய்யு மச்சிவாத்துவித நெறியதுவு
முபநிட மும்முளத்துதிக்கும்-
ஐய முந்திரிவுமறவிவைக்கருத்த
மறைந்திடுந் தத்துவமசியே

12
ஆக மமிருபத்தெட்டினின்
முடிவாகமம் வாதுளமதனில்-
ஏக மென்றியம்புமறையனு சரித்தேயியம்பிடு
நான்மறையவையில்-
பாக மதுறுஞ்சாமத்தின் முன்னெறியும்பகர்
சிவாத் துவிதவன் னெறியும்-
யூக மதிலங்கவியம்பிடுமதனா
லுண்மை சாமத்தினின்முடிவே

பந்தமதகன்று சுத்தமாயிருத்தல் 13
பரமமா முத்தியதென்றும்-
அந்த நல்லதிட்டானம்பது தானே
யாகுதன் முத்தியதென்றும்-
நந்தலில் சிவத்துங்கக்கமா யிருத்தனன்
குறுமுத்தியதென்றும்-
தந்திரமறையுப நிடமிம்மூன்றுஞ்
சாற்றுந்தாற்பரிய நீகேட்பாய்

பந்தமதுறுமான்மாவையே நோக்கிப் பந்த 14
நீங்குதன் முத்தியென்றும்-
அந்தநற்சுத்தான் மாவையே நோக்கியவ்
வதிட்டான நீயென்றும்-
நந்தலில் பரமானவனையே நோக்கி
நற்சிவத்தங்க நீயென்றும்-
தந்திரமாதி மூன்றுகாண்டமதுஞ்
சாற்றிடுமிவை தொந்தத்தசியே

முன்பத சிருட்டிப் பதிபசுபாச மூன்றையு 15
மனாதியாய் நிறுவும்-
பின்பத சிருட்டிச் சகமித்தையந்தப்
பிரமமேயுளதென நிறுவும்-
சின்பதமான வசிபத சிருட்டிச்
சிவசத்திலீலையாய் நிறுவும்-
மன்பத மூன்றும்பின்னைய பினையு
மாசறு சிவமுமென்றுணர்வாய்

முன்பதமானதொம்பதப் பசுவே 16
மூடிருணீங்கிச் சுத்தமதாய்ப்-
பின்பதமானதற் பதவருளிற் பிறங்குந்
தாதான் மியமடைந்தே-
சின்பதமான வசிபத சிவத்தைச் சேர்ந்ததற்
கங்கமாய் நின்றால்-
மன்மர முத்திமுடிந்ததுவாகு மற்றவை
தனினிற்கிற் குறையே.

கங்கையுமிடைச்சேரியு மொன்றுக்கொன்று 17
கைவிட்டதது விட்டதொக்கும்-
இங்கனங்குந்தம் மும்மொருவனு மற்றிடை
விடாதது விடாதொக்கும்-
எங்கனமவனுமிவனு மற்றிடை விட்டிடை
விடாதிருத்தலுங்கூடும்-
துங்கவவ்வசிக்குப் போந்திடுமருத்தந்
தோன்றிடாமறை நெறியோர்க்கே.

சீவனது பாதியீசனதுபாதி தீர்ந்து 18
சித்திரண்டதுமொன்றே-
ஆவது விட்டுவிடாதலைக் கணையென்ற
றைந்திடிலுபாதி யோரிரண்டும்-
மேவலை நீங்கல் விட்டலக்கணையாம்
விளங்குஞ் சித்திரண்டது மொன்றே-
ஆவது விடாதலக்கணையாகுமவைக்கு
மேலிலக்கணையின்றாம்.

விட்டலக்கணையும் விடாதலக் கணையும்விட்டு 19
விடாதலக்கணையும்-
திட்டமதுற வேதேர்ந்திடிற்பந்தந் தீர்ந்திடல்
விட்டலக்கணையாம்-
இட்டநல்ல திட்டானம் மதுதானாயிருத்தலே
விடாதலக் கணையாம்-
மெட்டறுசிவத்துக் கங்கமாயிருத்தல் விட்டு
விடாதலக்கணையே...

தத்துவ மசியென்றுரைக்கு முப்பதத்திற்றகு 20
வன்ன நான்கதாமவையும் -
ஒத்துறுதொந்தற் பதமவைதன்னி
லொன்றொன்றா மசியினி லிரண்டாம் -
தொத்துதலகன்று சுத்தமாயிருத்த
றொல்ல திட்டானந்தானதால் -
ஒத்துறுமவையிலொன்றேய
சியிலோரிரண்டங்க முஞ்சிவம்மே.

சுத்தமாய் நின்றாலிச்சை சுத்தியதாந் 21
தொல்லதிட்டானமாய் நின்றால் -
சித்தமான ஞானஞ்சுத்தியதாகுஞ்
சிவத்தினுக் கங்கமாய்நின்றால் -
மத்தமாங்கிரியைசுத்தியதாகும் வகுத்தவிம்
பூன்று மற்றொழுங்கில் -
சித்தமாய்சுத்தி யிலாவிடின் மீட்டுந்
தேகமொன்றெடுக்குமென் றுணர்வாய்

தொம்பதம் விளங்கின்மேல் வினைமறத்த 22
தொல்லிருளகன்று போயொளிக்கும்-
தம்பதமான தற்பதம் விளங்கிற்
சஞ்சிதமாயை போயொளிக்கும்-
அம்டதமான வசிபதம் விளங்கிலரும்
பிராரத்தம் போயொளிக்கும்-
செம்பரவருளே வடிவதாயான்மாச்
சிவத்தினுக் கங்கமாய்நிகழும்

23

அடுத்த மற்றிரண்டு சனனத்தில் வீட்டை
யடைந்திடுந்தொம்பத நெறியோர்-
அடுத்த மற்றொன்று சனனத்தில் வீட்டை
யடைந்திடுந்தற் பதநெறியோர்-
அடுத்த விச்சனனந்தனிலடைந்திடும்
வீடசிபதநெறியுளோரி வரும்-
அடுத்த விவ்வுடலோடைந்திடாவிடின்
மேலாக்கையொன் றெடுக்குமென்றுணர்வாய்

ஒடுங்கிடுங்காலந் தோன்றினவடைவினொடுங்கிடு 24
மென்றுரைப்பதனால்-
ஒடுங்கிடுங்காலஞ் சத்தியவாதிக் கொடுங்குமிவ்
வுடறன் மாத்திரையின்-
ஒடுங்கிடுங்காலம சத்தியவாதிக் கொடுங்குமிவ்
வுடலசத்தியமாய்,
ஒடுங்கிடுங்கால முடலிங்கே வீழ்ந்தாலொடுங்கின
தில்லை யென்றுணர்வாய்

மேலொருவடிவை யெடுத்ததேயாகின் 25
மேவுமிவ்வுடலிங்கேவீழும் -
மேலொருவடிவை யெடுத்ததின்றாகின்
மேவுமிவ்வுடலிங்கேவீழா-
மேலொருசிவத்தைச் சீவன்சென்றடையு
மேவுமிவ்வுடலிங்குத்தானே-
மேலொருசிவத்தின்வடிவதாமருளாய்
வெளியதா யலகுகண்டிடவே

சூக்கும மதனினின்று முன்வினையிற் 26
றூலதேகமு முளதாகும்-
சூக்குமந்தன துகாரணமடையிற்றூல
முஞ்சூக்குமத்தடையும்-
சூக்குமந்தனது காரணமடையத்தூல
மிங்ககன்றதேயென்றால்-
சூக்குமந்தனது காரணம் விடுத்துத்தூல
மொன்றெடுத்த தென்றுணர்வாய்

தூலவிவ் வுடலைவிடுத்து நில்லாது 27
சூக்குமஞ்சூக்குமம் விடுத்துத்-
தூலநில்லா தீதிரண்டையும் விடுத்து
தொல்லுயர் நிலாவுயிர்விடுத்துத்-
தூலசூக்கு மங்கணின்றிடாதுயிருஞ்
சூக்குமமும் முடிவடைந்தால்-
தூலமுமுடிவை யடைந்திடாதிந்தத்
தொல்லுலகினில் விழுந்திடுமோ

வினையினிலெடுத்த விவ்வுடன் மேலும் 28
வினையுள தெனிலிங்கெயகலும்-
வினையில தெனிலிங் கிவ்வுடறானே
வினையறுமோ மயமாகி-
வினையுடவுடல் போற்றோற்றன் மாத்திரமாய்
விளங்கியே வெந்துறுபுரிபோல்-
வினையிலாப்பரம முத்தியில் வெளியாய்
விமல நல்லருளதாய்விடுமே

29

சீவசிற்றறிவுமிம் முத்தவறிவாய்த்

திகழ்ந்திடினுடண் மருள்வடிவும்-

தாவருமோங்காரவ் வடிவாகுந்தக்க

சீவன் முத்தவறிவும்-

மேவரும்பர முத்தவ்வறிவாகில்

விளங்குமோங்கார வவ்வடிவம்-

ஓவலிலந்த வருள்வடிவாகு

மொழுங்கிதே யென்றுணர்ந்திடுவாய்

பிறாரத்த முடன்பாடென்றெந்த நெறியும் 30

பேசிடு மின்னெறியதற்குப்-

பிறாரத்த முடையோருகரேயன்றாம்

பிராரத்தம் புசித்திடுவோர்கட்-

கறாதிந்த மாயாதனு கரணங்களதனினாற்

சிவத்துவ மதனை-

உறாதுயற்றவரைச் சீவன் முத்தர்களென்றுரைத்

திடப்படுவதெப்படியோ

அன்னைதன் முலைப்பாலருந்திடும் பருவமகன்றப் 31

பாற்பருவம் வந்ததற்பின்-

அன்னைதன் முலைப்பாலருந்த வேண்டிடினுமம்

முலைவற்றியே யிடும்போல்-

பின்னையின் போகம் புசித்திடும் பருவம்

பெயர்ந்தப் போகருவம் வந்ததற்பின்-

பின்னையின்போகம் புசிக்க வேண்டிடினும்

பிராரத்த நீங்கியே விடுமால்

32

இந்த நல்லொழுங்கின் முன்னிருபதமு
மெய்தியிவ் வசிபதத்தடைந்தால்-
பந்தமில் சிவத்தை வடிவொடுமடையும்
பகுத்தவை யொன்றிலொன் றொதுங்கிச்-
சந்ததந் தருக்கியசி பதத்தருத் தந்தனைத்தத்த
மபதத்தினிலொடுக்கும்-
அந்தகர்தமக்கு மற்றொருகாலு
மசிபத முத்தியேகிடையா

33

முத்தியிற் சிவமு முயிரிரண்டாகின்
முத்திசாயுச் சியமின்றாம்-
முத்தியிற் சிவமு முயிருமொன்றாகின்
முத்தியே பெற்றவனின்றாம்-
முத்தியிற் சிவத்துக் குயிரங்கமாயின்
மொழியி மற்றவை யுண்டாமதனான்-
முத்தியிற் சிவமு முயிருஞ்சையோக
மொழியுந்தாதான் மியங்குறையே

34

சச்சிதானந்தத் தற்பரசிவமே தனது
தன்னிலையிலே நிற்க-
அச்சிதானந்த லீலையினாலே
யனேகமாய்ச் சராசரமாகி-
சச்சிதானந்த மேயுடல் பொறிகடகு
கரணங்களாய்க் கொண்டே-
அச்சிதானந்த லீலையினடித்து மடைந்திடும்
பண்டை யப்படியே

35

ஏகமாயசையாத் தற்பரலிங்கமி
லீலையிற் சரமனேகமதாய்-
மோகமாயிருளாயவ் விருளதனின்
மூடமாய்ச் சிறிதுநாளிருந்துஞ்-
சோகமாயிந்த விருளதாய தனிற்றுமக்குண்டு
சிறிது நாணடித்தும்-
பாகமாமோ வாயதிற்சின்னாணடித்தும்
பண்டு போனின்றிடு மன்றே

சலமதுதானே திரண்டுப்பதாயச் சலம்வந்துள் 36
பகவந்தச்சலமாய்-
நிலமதின்விளங்கு மஃதினைப்போல
நிமலமா மருவருடானே-
குலவுலீலை யினாற்றிரண்டுருவாகிக்
கூறின்றிக் கூறதாய் நடித்தும்-
இலகன்மாத்திரமாய் நடித்துமுன்போலு
மிருந்திடும் பண்டையப்படியே

சரமந்தவிருளிலிருந் திடுங்காலைத் 37
தனுமுதனான்குமவ் விருளாம்-
சரமந்த மருளினடித் திடுங்காலைத்
தனுமுதனான் குமம்மருளாம்-
சரமந்த வோவினடித் திடுங்காலைத்
தனுமுதனான்குமவ்வோவாம்-
சரமந்த வருளி னின் றிடுங்காலைத்
தனுமுதனான்குமவ் வருளாம்

இருள்வடிவதுவு மருள்வடிவதெனிலெய்தியே 38
மறைந்திடுமிந்த-
மருள்வடிவதுவு மோவடிவதனி
மறைந்திடுமோ வடிவதுவும்-
அருள் வடிவதனின் மறைந்திடுமந்த
வருள்வடிவதுமச் சிவத்தில்-
தெருள்வடிவான சத்தியாய் முன்போற்றி
கழுமென்றசி யுரைத்திடுமே

அருளுறுவடிவே முன்னியல்பான்மா 39
வாணவ விருளுறுமன்றே-
இருளுறு சுழுத்தி விழுங்கிடு மதனுக்கிந்த
மாயையின் சிருட்டியதாம் -
மருளுறு கனவு விழுங்கிடுமதற்கு
வந்தது பிரணவசிருட்டி-
தெருளுறு மந்தப்பிரணவம் விழுங்கத்
திகழுமவ் வருட்சிருட்டியதே

மருள்வடிவதனில் னீங்குதலின்றி 40
மற்றுமொன்றறி விலாக்குழந்தை -
வெருவருங்குமாரந்தருண மூப்பென்றே
விளங்குதல் போல வான்மாவும்-
அருள்வடிவதனி னீங்குதலின்றி
யாணவமாயையோ வருளாம்,
பருவ மற்றவையிலந்தந்த வடிவாய்ப்
பண்டுகோன் முடிவினின்றிடுமே

இருளினிற் பகுப்பின் றியசட்மயமாமிம் 41
மருளுதையமதாகின்,
உருவதாம் பஞ்சபூதமே மயமாமோ
வொளியுதையமதாகின்-
உருவருபஞ்சாக்கரமதே மயமாமோங்
கருளுதையமதாகின்-
அருவதாம்பஞ்சசத்தியே மயமாமாருயிர்
வடிவமென்றுணர்வாய்.

வடிவதின்விருள தாய்நிற்குங் காலை மன்னுயிர் 42
பசுவதாய்நிற்கும்-
வடிவதிம்மாயை யாய்நிற்குங் காலை மன்னுயிர்
சீவனாய் நிற்கும்-
வடிவதவ்வோவதாய் நிற்குங் காலை மன்னுயிர்
சீவன் முத்தனுமாம் -
வடிவதவ்வருளதாய் நிற்குங் காலை மன்னுயிர்
பரம முத்தனுமாம்

இருளுறு பசுவதாய் நிற்குங்காலை 43
யிருளதுவாகியே நிகழும்,
மருளுறு சீவனாய் நிற்குங்காலை
மருளதுவாகியே நிகழும்-
தெருளுறுமோவின் முத்தனாங்காலைத்
தெருள்பிரணவமதாய் நிகழும்-
அருளுறு பரமமுத்தனாங் காலையருளுதாய்
நிகழுமவ்வருளே

இருளதுவாகி நிகழ்ந்திடுங் காலையிரும் 44
பதியாகியே நிகழும்-
மருளதுவாகி நிகழ்திடுங் காலை மக
பரமாகியே நிகழும்-
தெருள்பிரணவமாய் நிகழ்ந்திடுங்காலைச்
சிவலிங்கமாகியே நிகழும்-
அருளதுவாகி நிகழ்ந்திடுங் காலையச்
சிவமாகுமச் சிவமே

அரியவவ் வருளேமூன்றியல் பதுவு 45
மைந்தூற் குறியுமாய் நிகழும்-
இரியதலில்லாச் சத்தையாய்ச் சித்தாயின்பமாய்
நிற்குதலியல்பாம்-
கிரியையு ஞானமும்மிசையதுவுங்
கிளர்திரோதையும் பரையதுவும்-
உரியதுகுறியாம் விரியிலையைந் தாயொடுங்கிடி
லொன்றதாய்நிற்கும்

பிரணவமதுவு மூன்றியல்பதுவும் பிறங்கு 46
மைங்குறியுமாய் நிகழும்-
திரமுறவவ்வு முவ்வுமவ்வது
மாய்த்திருந்தவே நிற்குதலியல்பாம்-
உரமுறு நவ்வுமவ்வுமச்
சிய்யுமோங்கிவவ்வும் யவ்வதுவும்-
விரவுறு குறியாம் விரியிலையைந்தாய்
மேவிடிலொன்றதாய் நிற்கும்

மருளுறுமாயை யதுவுமூன்றியல்பும் 47
வகுக்குமைங்குறியுமாய் நிகழும்-
உருவுறுதமசுரசத சத்துவமா யொன்றியே
நிற்குதலியல் பாம்-
பிருதிவி யுஞ்சலமுமனலதுவும்
பெருகிய வாயுவும் வானும்-
வருகுறியாகும் விரியிலையைந்தாய்
வந்தொடுங் கிடிலொன்றாய் நிற்கும்

ஐந்துநற்குறியு மூன்றியல்பதுவுமாகிய 48
வருளதேயருவாம்-
ஐந்துநற்குறியு மூன்றியல்பதுவுமாகிய
வோவருவுருவாம்-
ஐந்துநற்குறியு மூன்றியல்பதுவுமாகிய
மாயையே யருவாம்-
ஐந்துநற்குறியு மூன்றியல்பதுவுமாகிய
வினவயிலூ ணுளவாம்

உருவமா முணவே யெதிரதாமுபைய 49
முளத்தினிலுருசி மாத்திரமாம்-
அருவமா முணவே திருத்திமாத்திரமா
யறிவினில் விளங்கிடுமந்த-
உருவமா முணவே சீவருக்குரித்தாமுபையமிம்
முத்தருக்குரித்தாம்-
அருவமா முணவேயம் முத்தருக்குரித்
தாமெனவறைந்திடு மசியே

உருவமா முணவாலுருவ மாமுடைய 50
வுணவினாலுபையமே மயமாம்-
அருவமா முணவாலருவமே மயமாமச்
சிவாங்கிசன் வடிவதுவே-
உருவமா முணவாற்சீவனா முபையவுண
வினாற்சீவன் முத்தனுமாம்,
அருவமா முணவாற் பரமமுத்தனு
மாமச்சி வாங்கிசனுயிரதுவே

அன்னிய தசையை யருந்துதன் மனிதர்க்கடாது 51
மற்றதை யருந்திடுவோர்-
அன்னிய மிருகாதிகளென வறையலாகு
மற்றதின்சிவாங்கிசரும்-
அன்னிய மாயா வுணவருந்திடுத லடாது
மற்றதையருந்திடுவோர்,
அன்னிய மாயா சகீதசீவர்களென்
றறைந்திடாலாகு மென்றுணர்வாய்

அசுத்தவிவ் வுணவே புசித்திடுமளவு 52
மச்சுத் தாவத்தையைநீங்கி-
அசுத்தவத்தையினை விழுங்கிடுஞ் சுத்தவவத்தை
வந்தடைதலே யிலையாம்-
அசுத்தவிவ் வுணவைச் சுத்தமதாகவத்தினிற்
பாவனை செய்தால்-
அசுத்தவிந் நினைவைநீங்கியந் நினைவை
யகத்தினிற் பொருந்தியேநிற்கும்

திரிவித குணத்திற்றாமதமோகந் 53

திகழுமிராசத மிராகம்-

உரியசத்துவமே ஞானமதாகு

முலகிலிம் முக்குணவுணவே-

விரியுமற்றவையி லெவை புசித்ததுவோ

விளங்கிடுமக் குணமல்லால்-

அரியசுத்தவத்தை யடைவதேயிலை யவ்வவத்தை

வந்துறும் வகைகேட்பாய்

அன்னைதன் வயிற்றிற் புசித்தவக் குணமாயாக்கையும் 54

பொறியுமம் மனமும்-

மன்னியும் பினுமப் புசிப்புமேன் மிகவும்

வாஞ்சையுற்றருந்தியே மேலும்-

உன்னலும் பொறியுமுடலுமும் மூன்று

மொத்திடுமெனத் தெளிந்துணர்ந்து-

தன்னதுள்ளவையிலுருருசி

திருத்திதனில் வயிராகமேயாகும்

உலகினில் விடைய விச்சையை 55

யுடையோனுணவதற் கேற்கவேகூட்டி-

இலகிடப்பு சித்தான் முயற்சி மேன்மேலுமேறியே

வளர்ந்திடுமதுபோல்-

குலவிடும் வீட்டிலிச்சையே யுடையோன்

கொண்டதற் கேற்கவேயுணவை-

இலகிடப்பு சித்தான் முயற்சிமேன்

மேலுமேறியே வளர்ந்திடுமன்றே

தமகுணப்புசிப்பே மயக்கத்தையளிக்குந் 56
தருமிராசத குணப்புசிப்பே-
மமதையை யளிக்குஞ்சத்துவப்
புசிப்பே மயக்கமுமதையுமகற்றி-
அமலநல்லுணர்வே யளித்திடு
மதனாலவை யிரண்டினுநசையகற்றி
நிமலசத்துவவே வருத்தனையாக
நீன்று சத்துவப் புசிப்பருந்தும்

அடிசின்முன்னுரைக்குமறுசுவையவையை- 57
யருந்திடுகாலையினோக்குக்-
கடினமுமுரைப்புமிராசதமவையிற்-
கழிந்திடும்புராதனமூசன்-
மடிவுறுதமசென்றிருமையுமகற்றி
மாலைகாலைப் பொழுதகற்றிக்-
கடினவுச்சியிற்சத்துவகுணப்புசிப்பே
கைக்கொண்டுதினமருந்திடுமால்

இடம்பொருளேவன்மூன்றையு 58
முடையோர்க்கித்தகையுணவுறுமந்த-
இடம்பொருளேவன்மூன்றையு-
மகன்றோர்க்கித்தகைவுணவுறாததனால்-
திடம்பெறவூரினுச்சியிலேகித்
திருவருள் புசிப்பித்தலென்றெ
விடம்பெறினுங்கைப்பெற்றதையருந்தில்
விமலமாய்நின்றிடுஞ்சித்தம்

தந்திரகிரியைநெறிதனிலிசன்றந்திடப் 59
புசிக்கும்புன்மறைசொல்-
அந்தநல்லுபாசனாநெறியதனிலனைத்து-
நாமெனக்கண்டுபுசிக்கும்-
இந்தவவ்வுணவின்மாறுபாடின்றி-
யிருமையுமிடிந்ததேயாகின்-
தொந்தமில்சிவமேசடுமுகமாகித்
தொக்கிருந்தருந்தன்மேனினைவாம்

இருவகைநெறியும்வரவுபோக்குடைத்- 60
தாயியங்கிடுமிதுவன்றிமாயை-
ஒருமுதலென்றுமித்தையதென்று-
முறைத்திடுநிட்டையும்விகற்ப-
நிருவிகற்பமுமாய்நிகழ்ந்திடுஞ்சகச
நிட்டையெக்காலையு மின்றென்-
றொருவிமற்றவையைச்சகச-
நிட்டையரையுலகெங்குந்தேடியேயிடுமால்

முன்புறுநிட்டைசவிகற்பமாகி- 61
முத்தியின்மூன்றுநின்றிலகும்-
பின்பறுநிட்டை நிருவிகற்பமதாய்
பிரமமற்றென்றுநின்றிலகும்-
வன்புறந்நிட்டையிருமையமுறினும்-
வரவுபோக்குடையதாய்நிகழும்-
இன்புறிந்நிட்டைசகசமாதிகி-
யிலங்கிநின்றிடு நின்றபடியே

சவிகற்பநிருவிகற்பநிட்டையதுஞ் 62
சத்துவகுணத்தில்வந்ததுவாம்-
இவிகற்பநீங்கிவருடமாயிர-
மங்கிருந்திடினும்பினும் விழிக்கும்-
செவிதனிலடையுஞ்சகசநிட்டையதே
திருவருடன்னில்வந்ததுவாம்-
தவிருதல்கூடலின்றியேயங்குத்-
தங்கிநின்றிடுநின்றபடியே

சகசநன்னிட்டையியல்புதம்முயற்சி- 63
சற்றொன்றுமின்றியேயருளால்-
சுகமதும்போகமதுவுந்தம்முடலுந்தகு-
கரணமுமவையெவையாய்-
அகமதிலுதித்ததுமறையாமலகன்ற
துபின்னுதியாமல்-
அகமுரைகாயவருத்தமேயின்றிய-
மர்ந்துநின்றிடுநின்றபடியே

அருளண்டமாகி லுயிர்பிண்டமாகு 64
மண்டமுந்தோற்றன்மாத்திரமாய்-
அருள்நின்ற தாகிற்பிண்டமுமது-
போலாகியேநின்றிடுமண்டம்-
அருள்வடிவாகிற்பிண்டமுமுயிராயருளிற்
றாதான்மியமடையும்-
அருளந்தச்சிவத்துக்கங்கமதாகியமர்ந்து
நின்றிடுநின்றபடியே

இருளினிலிருந்தும் பருவம்வந்ததற் 65
பினியற்றிடுமுயற்சியொன்றின்றி-
மருளினிலடைந்துமருள்வடிவாகி
வயங்கிடுஞ்சகசமேபோல-
மருளினிலிருந்தும்பருவம்வந்ததற்பின்
வருந்திடுமுயற்சி யொன்றின்றி-
அருளினிலடைந்திங்கருள்வடிவாகி
யமர்ந்துநின்றிடுநின்றபடியே

மருள்வடிவதற்குமஃதைநானென்றே 66
மனுஞ்சீவனுக்குமாதரவாய்-
மருள்வடிவமுதம்புசித்திடுமதுவே
வயங்கிடுமற்றதையொருவி
அருள்வடிவமுதமுறிடவருந்திய
ஃதுமிச்சீவனுங்கரைந்தே-
அருள்வடிவதுவுஞ் சிவாங்கிசனும்மா
யமர்ந்துநின்றிடு நின்றபடியே

சாக்கிரமதனினிற்குந்தத்துவத்திற் 67
சாற்றுங்கேவலத்தினிற்சிறிது-
நீக்கிமற்றதற்குநிற்குந்தத்துவத்தை
நிறுத்துதல்போலநின்மலமாம்-
சாக்கிரமதனினீக்குதலின்றித்தத்துவ
மனைத்துஞ்சுத்தத்தில்-
ஆக்கியேநிறுத்துந்திருவருளதனாலடைந்து
நின்றிடுநின்றபடியே

மருள்வடிவாகியிருந்திடுமிடமு- 68
மருளதாய்ப்புசிப்பதுமருளாய்-
அருளிதின்மறைந்துநிற்குமென்பதுவு
மன்றியேநின்றமுன்போல-
அருள்வடிவாகியிருந்திடுமிடமு
மருளதாய்ப்புசிப்பதுமருளாய்-
மருளிதின்மறைந்து நிற்குமென்பதுவு
மாற்றிநின்றிடுநின்றபடியே

சகசநிட்டையது லபித்திடுங்காலை 69
தம்முயற்சியதொன்றுமின்றிச்-
சகசமதாசித்தன்னுளமதினிற்-
றானின்றிங்கிடைவிடாதூறும்-
சுகவருளமுதமதனையேயந்தி
தொல்வடிவதுமெள்ளக்கரைந்து-
சுகவருள்வடிவாய்ச்சுட்டெலாமறுளாய்த்
தோன்றிநின் றிடுநின்றபடியே

அருளொளியிச்சைய துதனிலு 70
திக்கிலசைவறநின்றிடுஞ்சித்தம்-
அருளொளிஞானமதுதனிலு
திக்கிலகிலமவ்வருளதாத்தோன்றும்
அருளொளிகிரியையதுதனிலு
திக்கிலகத்தினின்றருளமுதூறும்-
அருளொளியமுதமருந்தியவ்வடிவா
யமர்ந்துநின்றிடுநின்றபடியே

இருளுறுமவத்தையடைந்தெங்கு 71
மிருளாயிருந்தபின்விழித்திடல்போலும்-
அருளுறுமவத்தைவடைந்தெங்கு
மருளாயமர்ந்துபின் விழித்திடுமென்னில்-
இருளுறுமவத்தைத்தமசினாலடைந்தே
யிராசதத்தாற்பினும்விழிக்கும்-
அருளுறுமவத்தைச்சத்துவத்தடைந்தே
யந்தராசதத்திற்பின்விழிக்கும்

மாயையிதடைந்தபின்பிருளவத்தை 72
வந்தடையாதுபின்படைதன்-
மாயையின்றமசாலரதலாற்போக்கும்
வரவுமாய்நிகழ்ந்திடுமதன்மேல்-
ஆயவவ்வருளைபடைந்தபின்மாயை
யடைவதேயிலைபினுமடைந்தால்-
ஆயவல்வருளையடைந்ததேயின்றா
மடைந்ததுமாயைசத்துவத்தால்

இருளினிலடைந்துதானுமவ்- 73
விருளாயிருந்தங்குநின்றதாயிடினும்-
அருளினி லடைந்துதானுமவ்
வருளாயமர்ந்தங்குநின்றதாயிடினும்-
மருளினிலடைந்தவடிவநில்லாது
வடிவதிங்கிருத்தலேதென்னில்-
இருளருளவத்தைதனிற்குண
போதமிலங்கியங் கிருத்தலினன்றே

சத்துவகுண மேவருத்தனையாகித்தங்கியே 74
யுளத்தினுணின்றால்-
ஒத்துறுநிட்டை கூடிடுமிலதே
லொருவியிச் சகலகேவலத்தைத்-
தொத்துறுமன்றிக் குணமுமாமையினிற்
றோன்றினதாதலாலிந்த-
ஒத்துறுநிட்டையுண்மையேயன்றா
முபாசக நிட்டையென்றுணர்வாய்

ஆதலிற்சகலகேவல சுத்தமடைந்திடலிங்கு 75
மாயையதாம்-
வாதனை யொழிந்துங்குணமிருத்தலினிவ்
வடிவகன்றிடிற் பினுஞ்சித்த-
சாதமுற்றிடுதலன்றியே வீட்டைத்
தானடைந் திடுதலேயின்றாம்-
ஏதமிலருளிலுண்மை நிட்டையினை
யெய்தினோர் சீவன்முத்தர்களே

சீவனிம்மாயை தனின்முத்த னருளிற் 76
சீவன்முத்தன் னடுவோவின்-
மேவலிற்சீவன் றனக்கந்த வருளு
மெய்முத்தன் றனக்கு மாயையு மில்-
சீவன்முத் தனுக்கே ரியின் கரை மீதிற்
றிகழ்ந்திடு வோனைப் போற் றோன்றும்-
ஆவதுநாகங் கண்கரிதுதிக்கை யரிதல்
போற் காகங்கண் மணிபோல்

அந்தர வடிவசீவன் முத்தர்களிவ் 77
வடிசிலைப் புசித்ததேயின்றாம்-
இந்தவிவ் வுலகிலிது புசித்திடுவென்றிந்
நெறியோர் கணின்றிறைஞ்சித்-
தந்திடிலுணவுமளவின்றிப் புசிக்குஞ்ச
மித்ததுமலமதுமாகா-
மந்திரமதனைவடிவதாய்க்கொண்ட
மகிமையி லென்றுணர்ந்திடுவாய்

எங்கெங்கு நோக்கின் மருண்மயமாகி 78
யிருந்திடும் பந்தமாந்திசையில்-
தங்குந்தன் வடிவமருண்மயமாகித்
தயங்கியே நின்றதுகுறிபோல்-
எங்கெங்கு நோக்கிலருண் மயமாகியிருந்திடு
முத்தியாந் திசையில்-
தங்குந்தன்வடிவமருண்மயமாகித்
தயங்கியே நிற்குதல்குறியே

அருள்வடிவதுவே பார்வையிற்றொக்கி 79
லகப்படாதென்று நின்றிலகும்-
மருள்வடிவதுவே பார்வையிற்றொக்கில்
வந்தகப்பட்டு நின்றிலகும்-
அருண்மருணடு வாமோவடிவதுவே
யகப்படும் பார்வையொன்றுக்கே-
மருள்வடிவுலகுமோவடிவோர்க்கு
வாய்த்திடும் பார்வையொன்றுக்கே

பழுதையிற்கிளிஞ்சில் கட்டையினின்றும் 80
பாம்பும் வெள்ளியுங் கள்வனும்போல்-
எழுதருமாரேரபிதமதிட்டான
மிலங்கிடிலிலாலது போலும்-
முழுதுணர்சிவம்வந்துதித்தவிச்சீவன்
முத்தருக்குலக மின்றுதித்தல்-
கழுதிரதம்போற்காட்சி மாத்திரமாய்க்
கவும் விவகாரமேயின்றாம்

கனவதுபோல் விவகாரமுண்டென்னிற் 81
கனவதுநீங்கியே விழித்தால்-
கனவிதென்றுணருமாங்கவர் தமக்கக்கனவு
வந்துதவுதலுண்டோ
கனவுமுன்கண்ட நினைவு மாத்திரமாய்க்
காணுறு மகத்ததுபோல-
கனவிந்தவுலகுஞ்சீவன் முத்தருக்காணன்
மாத்திரமதாய் நிகழும்

சொற்பன மதனிற்கனவி தென்றிடுமோர் 82
சொற்பனசாக்கிர நடுவே-
நிற்பனபோலுமருள் மருண்டுவே
நின்றிடும் பிரணவவடிவம்-
சிற்பரசீவன் முத்தனவ் வடிவாய்ச்
செகமிதுஞ் சிவமதுந்தோன்ற-
நிற்பனதனக்குநிழலின்றிநிழற்போனிலத்
தடியின்றியே நிகழும்

வெந்துறுபடமும் வறுத்திடும்வித்தும் 83
விளங்கிடுங்கானலிற் சலமும்-
இந்திரதனுவுங் கனலிருந்தகன்றவிட
மதுமிங்கு முன்னிருந்த-
முந்துறுகடமுங்கடமதையெடுத்து
முடிந்தபின்றிகிரியிற் சுற்றும்-
கந்துறுநகரும்போன்முத்தர்வடிவுங்
காட்சிமாத்திரமதாய் நிகழும்

மண்ணினிற்றடுக் கச்சலத்தினின்னைக் 84
கவருங்கனலிற் சுடவளியால்-
நண்ணின்றசைக்க வெளியிடம்விடவே
நணுகிடாவதன்று நின்றிலகும்-
புண்ணியசீவன்முத்தர் தம்வடிவம்
பொற்புறவ்வடிவு கண்டளவே-
விண்ணின்மண்ணினிற்பா தலத்தினினுள்ளோர்
வியப்பொடு மெழுந்திறைஞ்சிடுவோர்

மூன்றுநற்சுடரினின்னை யொப்பவராய் 85
மூன்றுகால முமுணர்ந்தவராய்-
மூன்றுலகத்து முவமையில்லவராய்
மூன்றுலகும் மறிந்தவராய்-
மூன்றுநற்காண்ட முந்தெரிந்தவராய்
மூன்றுசிற்பதமு முற்றவராய்-
மூன்றுமுன்மல முமொருங்கறுப்பவராய்
மூன்றுதாபமும கன்றவராய்

அகவிருண்மாயைக் கருமமிம்மூன்று 86
மகற்றியே சுத்தங்கமாக்கித்-
தகநிறுத்திடுதல்கைய
தாமப்பாற்றன்னு யிராகியேநிகழும்-
சுகசிவவுதையமாக்குதறீயாஞ்
சொற்றிடு தீக்கையினருத்தம்-
ஜெகமிதிலவையிற் பாவனைகடந்து
செய்தங்கு நிறுத்தவல்லவராய்

பிரணவவமுதே புசித்தனுதினமும் 87
பிரணவமயமதேயாகி-
மரணமதுறுமிம் மனிதரைப் போல
வடிவமாத்திரமதே தோன்றிப்-
புரணநல் லொளிக்குமாயைக்கு நடுவே
புகுந்திருந்திலங்கு நற்குருவைச்-
சரணெனவடைந்திங்கவனருளாலே
தரிக்கப் பெற்றாய்கத்திலிங்கம்

தேகமும்பொறியுங்கரணமு 88
முயிருந்திருவுறு மாயையின்மயத்தை-
ஏகநின்றகற்றித் தீக்கையிலாசானி
வைக்க திட்டானமந்திரமே-
ஆகநின்றமைத்தவகை குருவருளால
றிந்ததிற் பாவனைதிடமாய்-
ஊகமதுடனே முன்னினை
வகற்றியுளத்தினிற் சகசமேபிறந்து:

இக்குலந்தனக்கிச் சமையமதென்று 89

மியம்புதலிலையதனாலே-

இக்குலந்தனை விட்டெச்சமையத்து

மெய்துதனியாயமதாகும்-

இக்குவல யத்திலெச்சமையத்து

மிலங்கிடுஞானமுண்டதனால்-

இக்குவலயத்திலெச் சமையத்து

மியற்கையைவிட்டிடலாகா

அன்னிய சத்தங்க வருதலகற்றி 90

யன்னிய ரசனையுமகற்றி-

அன்னிய ரூபநோக்குதலகற்றி

யன்னிய பரிசமுமகற்றி-

அன்னியசத்தங்கேட்குதலகற்றி

யன்னிய நினைவதுமகற்றி-

அன்னியருடனேயிணங்குதலகற்றி

யன்னியருறை விடமகற்றி

அன்னியற் கையில் வாங்குதலகற்றி 91

யன்னியர்க் கீகுதலகற்றி-

அன்னிய கடவுள் வணங்குதலகற்றி

யன்னிய கிரியையுமகற்றி-

அன்னிய நூலை யோதுதலகற்றி

யன்னிய கேள்வியுமகற்றி-

அன்னிய பாகமருந்துதலகற்றி

யன்னியவகை யறத்துடங்கி

சமைய நற்கிரியையனைத்தையும் விடினுந் 92
தனக்கந்தப் பிரணவவமுதம்-
அமைய நின்றூரி யதனையே
யருந்தியவ் வடிவாயிடுமளவும்-
சமையிகள் பாகமதனையே கொண்டு
தற்பர நிவேத்தியம் புரியும்-
அமைதியைவிட்டான்மேற்கொளாதென்ப
தறிந்ததை நியமமாய்க்கொள்ளும்

புரிசடையோனுக் கற்பித்துக்கொளினும் 93
பொருந்திய பொருளதேவேண்டும்-
திரிவின்றி யொன்றாய்பாவித்துக் கொளினுஞ் செல்லல்
போலொருங்கதேவேண்டும்-
அரியநல்லறத்தை வேண்டிடிற் பொருளுமறமதா
யீட்டவேண்டிடும்போல-
உரியதற்சமையத்தொழுங்கினிற்புசித்தா
லுளத்தழுக்கின்றியேவதியும்

ஞான சங்கமத்துக்கிந்நெறியதனி 94
னவிற்றிடுஞ்சகியுஞ்சமையத்-
தீனமிலாசாரமும் விசாரித்தலியகையே
யன்றவரேனும்-
ஊனமிலக்கந் தனிலிங்கமொன்றே
யுளபிர மாணமாய்க் கொண்டங்-
கானநற்பயிர்க்கமவர் மனைதோறு
மங்கையேற் றருந்திடலாமால்

சடுத்தலமதினுமிலிங்கமேயாகித் 95
தானெனல் விடுத்தருந்தியபின்-
கொடுத்தவன்றானுங் கொடுத்திடு பொருளுங்
கொள்ளுவோன்றானு மொன்றாக-
அடுத்தவிம்மாயா வடிவதைநோக்கி
யகற்றியவ்வோமயமாக-
விடுத்தனுதினமும் புசித்திடிலனைத்தும்
விமலவோ மயமதாய்விடுமே

இன்னதன்மையவாஞ் சுத்தபாவனையி 96
லிரும்பிராரத்தம் போயொளித்துத்-
தன்னதுணின்றிங் கிடைவிடா
தூறுந்தக்க தோற்பிரணவவமுதம்-
அன்னதையருந்தி முன்வடிவதுவு
மங்ஙனமோ மயமாகி-
இன்னிலமதனிற்றோற்றன் மாத்திரமா
யியங்குதற் சீவன்முத்தியதே

அறிவிலாக் குழந்தைப் பருவத்தின் முலைப்பால 97
ருந்திடுங்கு மாரங்காளையினில்-
அறிவிலாக் குழந்தையருந்துதல் கண்டு
மதினசை சகசமாயிலதின்-
அறிவிலாச் சீவத்துவப் பருவத்தினருந்திடு
மாயையி னுணவை-
அறிவிலாச் சீவரருந்துதல்கண்டு
மதினசை சகசமாயின்றான்

அனமதும்பாலுஞ் சருக்கரைகண்டு 98
மங்கினிவகை களுந்தேனும்-
இனமவையொன்றாய்க் கூட்டியருசியினிதைய
நின்றிடை விடாதூறும்-
கனபிரணவவமுதத்தையே யருந்திக்
களிப்பவர் மீட்டுமிச்சகத்தின்-
பினமுறுவிடைய வின்பையெண்ணிடுமோ
பிராரத்தமும் மிலையவர்க்கே

உபையநல்லமுதே புசித்தனுதினமு 99
முபையமேவடிவதுவாகி-
அபைய மென்றுரைக்கு முயிர்களுக்
கிரங்கியஞ்சலென்றவர்களை நோக்கி-
உபைய வந்நெறியின்பயனை முன்னுணர்த்தி
யுபநிடச்சுருதி நின்றுரைக்கும்-
அபையமற்றொன்று மிலாதவிந்நெறியே
யனுக்கிரகம் புரிந்திடுமால்

இந்நிலை சின்னாட் சீவர்கணிமித்த 100
மிருந்தனுக் கிரகமே புரிந்தும்-
தந்நிலைய தனினின்றருள
முதந்தான்புசித் தருண்மயமாகி-
அந்நிலை பரமமுத்தியிற் சிவத்துக்
கங்கமாய் நிகழுமுன்போலென்-
றிந்நிலை சாமத்தசிபதமுரைக்குமிது
சிவாத்து விதமென்றுணர்வாய்.

என்றெனையாண்ட விருத்தவம்பிகையே 101
யிதையத்தும் விளக்கியென்வாக்கும்-
நின்றுரைத்திந்த நெறிசொலு மருத்த
நினக்கும் வாய்த்திடுமென்று வாழ்த்திச்
சென்றெனதுடலுங்காண முஞ்செகமுஞ்
சேர்ந்திடும் போகமுந்தானாய்-
நின்றனள் கண்டேனிதற்குக்
கைம்மாறென்னிரு மலைவாழிநீடூழி

சுத்தசாதகம்-முற்றிற்று.